


கடலூர் கிழக்கு மாவட்டக் கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் வடலூரில் நடைபெற்றது. கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதாராணி வரவேற்புரையாற்றினார். கழக மகளிரணி துணை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, கழக மகளிரணி சமூகவலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன்,கடலூர் மேயர் சுந்தரி ராஜா,சுதா சம்பத், மஞ்சு உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# 2024-ஆம் ஆண்டுக்கான ‘டாக்டர் அம்பேத்கர் விருதுக்கு’ விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.10-

தமிழ்நாட்டில் பட்டியல் இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். பட்டியல் இன மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றிவரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2024 -ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். www.tn.gov.in/ta/forms/Deptname/1 என்ற இணையதளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப்படி வத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம், சென்னை 05 அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்ப படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# அரியலூரில் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர், முனைவர் சபாபதி மோகன் பங்கேற்பு!

அரியலூர், நவ. 10-

அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

ஜெயங் கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு பேசியதாவது:-

கழகத் தலைவரும்,தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் மு.க ஸ்டாலின் அவர்கள் வருகின்ற நவம்பர் 15 ஆம் தேதி அரியலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து செயங்கொண்டம் அருகே உள்ள மகிமைபுரத்தில் சிப்காட் தொழிற்சாலை அமைக்க அடிக்கல் நாட்டுகிறார். அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார். நமது அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மிகபிரமாண்டமான சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என கூறினார். மேலிட சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் முனைவர் சபாபதிமோகன், குன்னம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி ஆகியோர் எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் குறித்து எப்படி எல்லாம் பணியாற்ற வேண்டும் மூன்றரை ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு என்ன, என்ன திட்டங்களை நாம் மக்களுக்கு செய்தோம் என எடுத்துக்கூறி வாக்கு சேகரிக்கவேண்டும் என பேசினார்கள்.


இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு,

மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ. செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. அசோகசக்ரவர்த்தி, ரெங்க. முருகன், கோ.அறிவழகன், ஆர். கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப. கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், திருமானூர் ஒன்றியக்குழு தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி, நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, ஆர்.எம். அன்பழகன், சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தெய்வ. இளையராஜா, கே.சி.லூயி கதிரவன்,

எஸ். ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, என்.ஆர். ராமதுரை,தங்க. ராமகிருஷ்ணன், ஆதி. க.இளங்கோவன், அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், செ. இளஞ்செழியன், எம். ஜி. ராஜேந்திரன், மீனா சாமிநாதன், ரவிக்குமார், குலோத்துங்கன், வை. முருகானந்தம், க.கருப்புசாமி, க.செல்வராஜ், ம.ஜெயக்குமார், பொன். செல்வம், அருண் ராஜா, இளங்கோவன், சஞ்சய் குமார் ஜோ.வின்சன் ராஜா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சிகழக தோழர்கள், அனைத்து அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்யா; ஜம்மு – காஷ்மீர் சட்டப் பேரவையில், சிறப்பு அந்தஸ்து தொடர்பான அரசியல் சட்டத்தின் 370 ஆவது பிரிவை மீண்டும் கொண்டுவருவது குறித்த ஆளுங் கட்சியின் தீர்மானத்தை அடுத்து, அங்கே பா.ஜ.க.வினரின் அமளி தொடர்ந்து நடைபெறுகிறதே ?

**போண்டி :** **ஆமாய்யா; குதிரை குப்புறத் தள்ளியது மட்டுமல்லாமல், குழியும் பறித்த கதையைப் போல இருக்கிறது பா.ஜ.க.வினரின் அமளி !**



கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. ஆறு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள 5, 6, 9 ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 5 | நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூரப்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, பிச்சாண்டாபாளையம், ஈரோடு – 638 052. |
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 9 | கொடி அரங்கம், குதிரைசாரிகுளம் பிரிவு, நான்கு வழிச் சாலை, திருமங்கலம், மதுரை – 625 706. |
| 11/11/2024 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | 6 | சந்திரா ஏ.சி. ஹால், விவேரா கிராண்ட் ஹோட்டல், பழனி சாலை, திண்டுக்கல் – 624 001. |

மண்டலம் 5, 6, 9 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 07-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

கடலூர், நவ.10-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 08.11.2024 - வெள்ளிக்கிழமை, மாலை கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடை பெற்றது.

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அமுதராணி வரவேற்புரையாற்றினார். கழக மகளிரணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, கழக மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர் சுதா சம்பத், கடலூர் மேயர் சுந்தரி ராஜா, பொதுக்குழு உறுப்பினர் மஞ்சு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 395 ஊராட்சி, 267 வார்டுகள் 622 இடங்களில் மாவட்டந்தோறும், நலத்திட்ட உதவிகள், அன்னதானம், மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும். மேலும் மாவட்டம் தோறும் பெண்கள் பங்கு பெறுகின்ற போட்டிகளை நடத்திட வேண்டும்.

பிஎல்ஏ2, பிஎல்சி பூத் கமிட்டி கூட்டங்களை தலைமை கழக பார்வையாளர் கொண்டு சிறப்பாக நடத்திட வேண்டும்.

வருகின்ற 14, 17, 26, 27 ஆகிய தேதிகளில் புதிய வாக்காளர் சேர்க்கை முகாம் நடைப்பெற இருக்கிறது. இதில் புதிய மற்றும் விடுப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கை பணியை துரிதமாக செய்திட வேண்டும். கழக அரசின் சாதனங்களை விளக்கி துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்திட வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப் பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், முத்து.பெருமாள், ஏ. எஸ்.மதியழகன், கே.ஆர். ராயர், தெ.காசிராஜன், ஆர்.நாராயணசாமி பி.சுப்ரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், விஜயசுந்தரம், எஸ்.செந்தில்குமார், வி.ஜி. பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.ஜி.பி.சபாநாயகம், ஆர்.கலையரசன், எம். சோழன், வி.கோவிந்தசாமி, த.சங்கர்,பி.சுந்தரபாண்டியன், வி.ஆர்.ராஜேந்திரகுமார், ஜெயபாண்டியன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, சிதம்பரம், நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான கே. ஆர். செந்தில்குமார், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர கழகச் செயலாளர் த.தமிழ்செல்வன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.விக்கிரமன், அ.ஞானசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி. ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், வி.பி.பாலு, எஸ்.பி.கண்ணன், பகுதி செயலாளர்கள் நடராஜன், பா.வெங்கடேஷ், இளையராஜா, எஸ்.சலீம், பேரூர் செயலாளர்கள் எஸ்.கணேசமூர்த்தி, க.பழனி, பூ.செல்வகுமார், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.எம்.மதியழகன், தொ.மு.ச. பழனிவேல், அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தானூர் சிவக்கொழுந்து, கி.தண்டபாணி,

ஆதிதிராவிடர் நலக்குழு பரந்தாமன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் சந்திர வர்ணம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு சந்திரசேகர் மகளிர் அணி தலைவர் லதா, துணை தலைவர் அமுதா, துணை அமைப்பாளர்கள் வெ.மலர்விழி, செ. சங்கீதா,ஆ.ஜீவா, சோ.லதா, மகளிர் தொண்டரணி தலைவர் பெ.குமாரி, துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா.விஜயலட்சுமி, உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மனோரஞ்சிதம் நன்றியுரையாற்றினார்.



கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக அரங்கில் நடைபெற்ற இரண்டு நாள் பன்னாட்டு வாங்குவோர் விற்பனையாளர் (BuyersSellers Meet) சந்திப்பு நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் (08.11.2024) குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் 43 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்து ரூபாய் 115.35 கோடி மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டனர். அருகில் குறு சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தொழில்துறை ஆணையர் எல்.நிர்மல்ராஜ், கூடுதல் ஆணையர் திருமதி. கே.சௌந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, ஆகியோர் உள்ளனர்.